"மழைநீர் சேமிப்போம்" "பிளாஸ்டிக்கை தவிர்ப்போம் "

நகராட்சி அலுவலகம்,
தேனி - அல்லிநகரம் ,
நாள் : 30.09.2021.

## நகர்மன்ற சாதாரணக் கூட்ட அழைப்பிதழ்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2051 பிலவ வருடம், புரட்டாசி மாதம் 14-ம் நாள் 30.09.2021-ம் தேதி வியாழக்கிழமை மாலை 04.00 மணி அளவில் நகர்மன்ற அலுவலகத்தில் உள்ள கூட்ட மண்டபத்தில் நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நடைபெறும்

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
தேனி - அல்லிநகரம் நகராட்சி

**பொருள் 01 :-**

தேனி – அல்லிநகரம் நகராட்சி குத்தகை இனங்களுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாவட்ட அளவிலான தமிழ் நாளிதழில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது

| வ. எண். | நாளிதழ் | பட்டியல் எண் | செய்தி மக்கள் தொடர்பு துறை அனுமதி விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | தமிழக நியூஸ் | எண். 1153, நாள்.04.09.2021 | செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி. வெளியீட்டு ஆணை எண் : 139 / ஒப்பந்தப்புள்ளி / விளம்பரம் / 2021, நாள் : 03.09.2021 | ரூ.26,220/– |

மேற்கண்ட தொகை ரூ.26,220/– ( ரூபாய் : பதினைந்து ஆயிரத்து ஐநூறு மட்டும் ) வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

அ ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 1952 / 2021 / அ3**

**தீர்மான எண் :** 2001
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 02 :-</u>**

தேனி - அல்லிநகரம் நகராட்சி பாதாள சாக்கடை திட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கான தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரிய தடையின்மை சான்றினை தொடர்ந்து ஐந்தாண்டுகளுக்கு ஒரே முறையில் புதுப்பித்தல் செய்து தரும் வகையில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் செயல்முறை ஆணை எண். 5 நாள். 02.08.2016 ன்படி, அறிவிக்கப்பட்டு உள்ளதால், இந்நகராட்சி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை தொடர்ந்து ஐந்து ஆண்டுகளுக்கு புதுப்பித்தல் செய்யக்கோரி, மாவட்ட சுற்றுப்புறச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியம், தேனி அவர்களின் கடித எண். Lr.No.:F.TEN0144/RL/DEE/TNPCB/TEN/2021 நாள்.14-09-2021ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் ஆண்டு ஒன்றுக்கு ரூ 2,17,200/- வீதம் ஐந்து வருட தடையின்மை சான்று பெற ஏற்கெனவே 2021-2022ம் ஆண்டுக்கு செலுத்தப்பட்ட தொகை ரூ 2,17,200/- தவிர்த்து மீதமுள்ள தொகை ரூ 8,68,800/- ஐ குடிநீர் நிதியில் இருந்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **Fees** | **Act** | **Demand Per Year** | **Amount Already paid for the year 2021-2022** | **4 Years Total Amount (2022-2023, 2023-2024, 2024-2025, 2025-2026)** |
|---|---|---|---|---|
| Consent Fees | Water Act | Rs: 1,08,600.00 | Rs. 2,17,200 | Rs. 8,68,800 |
| | Air Act | Rs: 1,08,600.00 | | |
| | **Total** | **Rs: 2,17,200.00** | | |

**<u>அலுவலகக்குறிப்பு :-</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட தொகை ரூ 8,68,800/- ஐ நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 1815 / 2013 / இ3**

**தீர்மான எண் :** 2002
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 03 :-</u>**

தேனி - அல்லிநகரம் நகராட்சியில் 2020 - 2021 ம் ஆண்டின் 15 வது மாநில மானிய நிதிக்குழு திட்டத்தின் கீழ் குடிநீர் பணி, மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளுவதற்கு ஒப்பந்தப்புள்ளி தள்ளி வைக்கப்பட்டதற்கான அறிவிப்பினை மாவட்ட அளவிலான தமிழ் தினசரி நாளிதழில்களில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்கண்ட நிறுவனத்தில் இருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | நாளிதழ் மற்றும் பட்டியல் தொகை வழங்கப்பட்ட வேண்டிய நிறுவனத்தின் விபரம் | செய்தி மக்கள் தொடர்பு துறை அனுமதி விபரம் | தொகை ( ரூ) |
|---|---|---|---|
| 1 | தினத்தந்தி நாளிதழ், பட்டியல் எண். 2122DGL231000370, நாள். 16.09.2021 | வெளியீட்டு ஆணை எண். 142 / செமதொஅ / தேனி / நாள். 15.09.2021 | 3225 |

மேற்கண்ட தொகை ரூ. 3225/-ஐ இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :-</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.** 163 **/** 2018 **/** இ1

**தீர்மான எண் :** 2003
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 04 :-</u>**

தேனி - அல்லிநகரம் நகராட்சியில் தற்போது நடைபெற்று வரும் திட்டப்பணிகள் குறித்த விபரத்தினை கீழ்கண்ட நாளிதழின் தொழில் மலரில் பிரசுரம் செய்யப்பட்டமைக்கு மாலை மலர் நாளிதழ் நிறுவனத்திடமிருந்து பட்டியல் தொகை வரப்பெற்று உள்ளது.

| வ.எண். | நாளிதழ் நிறுவனத்தின் பெயர் | பட்டியல் விபரம் | தொகை |
|---|---|---|---|
| 1 | மாலை மலர் நாளிதழ் | DGL - D21090092 | 9975 |

மேற்படி தொகையினை சம்மந்தப்பட்ட நாளிதழ் நிறுவனத்திற்கு இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.** 163 **/** 2018 **/ இ**1

**தீர்மான எண் :** 2004
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 05 :-

தேனி மாவட்டம், தேனி–அல்லிநகரம் நகராட்சி, அல்லிநகரம் கிராமம் நகரளவை வார்டு–பி, பிளாக் எண்.**7** , நகரளவை எண்கள்.**2/1** A,2/1B1, 2/1B2, 2/4A, 2/4B, 3/6A1 ) சர்வே எண்களில் கட்டுப்பட்டுள்ள **6.74** ஏக்கர் பரப்பளவு இடத்தினை அங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தில் விவசாய உயோக பகுதியிலிருந்து பொது குடியிருப்பு உபயோக பகுதியாக நிலப்பயன்பாடு மாற்றம் செய்ய தமிழ்நாடு குடிசைப்பகுதி வாரியத்தின்மூலம் நாளிதழில் பிரசுரம் செய்ய விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது. அதன் பேரில் மாவட்ட மக்கள் செய்தி அலுவலர் அவர்களுக்கு **19.08.2021** அன்று கடிதம் அனுப்பப்பட்டது. மேலும் **25.08.2021**ல் தினத்தந்தி தமிழ்நாளிதழிலும் , Tricity mirror என்ற ஆங்கில நாளிதழிலும் செய்தி வெளியிடப்பட்டது. இந்நாள் வரை மேலே குறிப்பிட்டுள்ள சர்வே எண்களுக்கு ஆட்சேபனை ஏதும் பொது மக்களிடம் இருந்து **30** நாட்களுக்குள் இவ்வலுவலகத்திற்கு ஏதும் பெறப்படவில்லை. எனவே மேற்படி சர்வே எண்கள் அமைந்துள்ள இடத்தினை அங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தில் விவசாய நில உபயோகத்திலிருந்து குடியிருப்பு உபயோகமாக மாற்றம் செய்ய உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தேனி அவர்களுக்கு கடிதம் அனுப்ப மன்றத்தின் பார்வைக்கும் மற்றம் முடிவிற்கும்.

**அலுவலகக்குறிப்பு :-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 254 / 2021 / எப்–1**

**தீர்மான எண் :** 2005
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 06 :-</u>**

தேனி மாவட்டம், தேனி–அல்லிநகரம் நகராட்சி, அல்லிநகரம் கிராமம் வார்டு –B, பிளாக்–7, நகரளவை எண்கள்.**3/3**B, 3/4,3/5B,3/6B,3/8,3/9,3/10,3/11,4/2B மற்றும் பிளாக் எண் **13**ல் நகரளவை எண்கள் **3/2**A,5/1,5/2A,5/3,6/2)இல் 15.12 ஏக்கர் பரப்பளவு இடத்தினை அங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தில் விவசாய உயோக பகுதியிலிருந்து பொது குடியிருப்பு உபயோக பகுதியாக நிலப்பயன்பாடு மாற்றம் செய்ய தமிழ்நாடு குடிசைப்பகுதி வாரியத்தின்மூலம் நாளிதழில் பிரசுரம் செய்ய விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது. அதன் பேரில் மாவட்ட மக்கள் செய்தி அலுவலர் அவர்களுக்கு **19.08.2021** அன்று கடிதம் அனுப்பப்பட்டது. மேலும் **26.08.2021**ல் தினகரன் தமிழ்நாளிதழிலும் , Tricity mirror என்ற ஆங்கில நாளிதழிலும் செய்தி வெளியிடப்பட்டது. இந்நாள் வரை மேலே குறிப்பிட்டுள்ள சர்வே எண்களுக்கு ஆட்சேபனை ஏதும் பொது மக்களிடம் இருந்து **30** நாட்களுக்குள் இவ்வலுவலகத்திற்கு ஏதும் பெறப்படவில்லை. எனவே மேற்படி சர்வே எண்கள் அமைந்துள்ள இடத்தினை அங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தில் விவசாய நில உபயோகத்திலிருந்து குடியிருப்பு உபயோகமாக மாற்றம் செய்ய உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தேனி அவர்களுக்கு கடிதம் அனுப்ப மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் முடிவிற்கும்.

**<u>அலுவலகக்குறிப்பு :-</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 253 / 2021 / எப்–1**

**தீர்மான எண் :** 2006
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 07 :-</u>**

தேனி - அல்லிநகரம் நகராட்சியில் Jal Jeevan Mission ( Urban ) or Amrut 2.0 திட்டத்தின் கீழ் 33 வார்டுகளில் உள்ள தார் சாலைகள், சிமெண்ட் சாலைகள், பேவர் பிளாக் சாலைகள், மண் சாலைகள், மழைநீர் வடிகால், தெருவிளக்குகள், குடிநீர் பகிர்மான குழாய்கள் மற்றும் பிரதான குழாய்கள், குடிநீர் வீட்டு இணைப்புகள், பாதாளச்சாக்கடை கழிவுநீர் குழாய்கள், பாதாளச் சாக்கடை வீட்டு இணைப்புகள், ஏனைய அனைத்தும் நகராட்சி வரைபடத்தில் **(** Town Map **)** Auto Cad மூலம் வரைபடம் தயார் செய்து, வரைபடம் மற்றும் அறிக்கைகள் நகராட்சி நிர்வாக ஆணையாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வேண்டியிருப்பதால், வரைபடம் தயார் செய்யும்

பணியினை தனியார் ( Private Consultancy ) மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியமாக உள்ளது. இப்பணியினை தனியார் மூலம் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ. 9.50/ - இலட்சம் ஆகும். மேற்படி பணிக்கான செலவினத் தொகையினை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**:-

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்..

**ந.க.எண்.** 2737 **/** 2021 **/ இ1**

**தீர்மான எண் :** 2007

**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 08 :-

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 24, விஸ்வநாததாஸ் தெரு, விஸ்வநாததாஸ் காலனி முடிவடையும் இடத்தில் உள்ளது. மேற்படி விஸ்வநாததாஸ் காலனி பகுதி மட்டும் அங்கீகரிக்கப்பட்ட பகுதியாகும். அப்பகுதியில் ஒரு சில மனைப் பிரிவுகளின் கழிவுநீர் இயற்கையான தரை அமைப்பு காரணமாக வடக்குப் பகுதியில் இருந்து, தெற்குப் பகுதியில் உள்ள அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவில் உள்ள காலி இடத்திற்கு செல்கிறது. அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவு வழியாக வடிகால் கட்டி கழிவுநீர் வெறியேற்ற வழிவகை இல்லை.

எனவே அங்கீகரிக்கப்பட்ட மனைப் பிரிவுகளின் வீட்டு கழிவுநீரை தெற்குப் பகுதியில் இருந்து வடக்குப் பகுதியில் உள்ள மேடான வடிகாலுக்கு செல்லும் வகையில் தண்ணீர் செல்லும் போக்கினை மாற்றி அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளுவதற்கு உத்தேச செலவினம் ரூ.1.00 /- இலட்சம் ஆகும். மேற்படி பணிக்கான செலவினத் தொகையினை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**:-

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்..

**ந.க.எண்.** 2674 **/** 2021 **/ இ1**

**தீர்மான எண் :** 2008

**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 09 :-

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலகம் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அலுவலகத்தின் 30.09.2021-ம் தேதிய தொலைபேசி செய்தியில் தெரிவித்துள்ளபடி, தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட 2 சமுதாய கழிப்பிடத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்வதற்கான பணிகள் மேற்கொள்ளுவதற்கு ரூ. 7.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ( ரூ ) இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண். 12 கக்கன்ஜி கானியில் உள்ள சமுதாயக் கழிப்பிடத்தில் பழுது பாக்கும் பணிகள் | 4.00 |
| 2 | வார்டு எண். 26 டி.பி. மேற்கு தெருவில் உள்ள சமுதாயக் கழிப்பிடத்தில் பழுது பாக்கும் பணிகள் | 3.50 |
| | **மொத்தம்** | **7.50** |

மேற்படி பணியினை மேற்கொள்ளுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து வழங்க கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

அ ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாத காரணத்தினால், மேற்குறிப்பிட்டுள்ள 2 பணிக்கான மதிப்பீடு தொகை ரூ. 7.50 இலட்சத்தினை முழுமானியமாக நிதி ஒதுக்கீடு செய்து வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 3374 / 2018 / இ1**

**தீர்மான எண் :** 2009
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 10 :-

தேனி- அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான அரப்படித்தேவன்பட்டி குடிநீர் நீரேற்று நிலையத்தில் உள் 9 உறை கிணறுகளில் உள்ள மோட்டார்கள் மற்றும் மின் இணைப்புகள் பழுதாகியுள்ளது. இதனால், மேற்கண்ட திட்டத்திலிருந்து குடிநீர் சப்ளைசெய்வது மிகவும்

சிமத்திற்குள்ளாகிறது. எனவே, மேற்கண்ட திட்டத்தில் உள்ள 9 உறைகிணறுகளில் உள்ள மின் மோட்டார்கள் மற்றும் மின் இணைப்புகள் புதிதாக மாற்றிடவும், அதற்கான புதிய கேபிள் பதிக்கவும் மற்றும் புதிய மோட்டர்களை உறை கிணற்றில் இறக்கவும். அதற்கான உத்தேசச்செலவினம் ரூ.9.90,000/- ( ரூபாய். ஒன்பது இலட்சத்தி தொன்னூராயிரம் மட்டும் ) ஆகும். எனவே, மேற்கண்ட பணிக்கும், அதற்கான உத்தேசச்செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) மேற்கண்ட தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
இ) மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்ம்ன்ற தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 2848 / 2021 / இ2**

**தீர்மான எண் :** 2010
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 11 :-</u>

தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தாமான பழைய பேருந்து முனையத்தின் வடக்குப் பகுதி நுழைவு வாயிலில் மழைநீர் கடத்துவதற்காக சிறுபாலம் அமைக்கப்பட்டு அதற்கு மேல் இரும்பு பைப்பில் ஆன மூடி அமைக்கப்பட்டு இருந்தது. மேற்படி இருப்பு பைப்பில் ஆன மூடி அமைப்பு அமைக்கப்பட்டு பல வருடங்கள் ஆன நிலையில் அடிக்கடி பழுதடைந்து விடுவதால் காமராஜ் பேருந்து முனையத்தின் வழியாக செல்லும் கம்பம், குமுளி மற்றும் போடிநாயக்கனூர் மார்க்கமாக செல்லும் பேருந்துகள் செல்லவதற்கு மிகவும் சிரமமாக உள்ளது.

எனவே பழுதடைந்த நிலையில் உள்ள இரும்பு குழாயினை முற்றிலுமாக அகற்றி விட்டு அவ்விடத்தில் புதியதாக இரும்பு கிரில் மூடி தயார் செய்து பொருத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளுவதற்கு உத்தேச செலவினம் ரூ. 0.92 /- இலட்சம் ஆகும். மேற்படி பணியினை மேற்கொள்ளுவதற்கும், அதற்கான செலவினத் தொகையினை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவினம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>:-

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்..

**ந.க.எண்.** 2847 **/** 2021 **/ இ1**

**தீர்மான எண் :** 2011
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 12 :-

பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தலைமையில் 23.07.2021 ம் தேதி அன்று இந்நகர்ப்பகுதியில் குடிநீர்பணி , பாதாளச்சாக்கடைத்திட்டப்பணி, தெருவிளக்குகள் மற்றும் அடிப்படை வசதிகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. அந்தந்த வார்டு பிரதிநிதிகள் மற்றும் முக்கிய பிரநிதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க மற்றும் பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் உத்திரவிற்கிணங்க,இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 9,டாக்டர். அம்பேத்கார் தெற்குத்தெருவில் புதிதாக போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைக்கவும், அதற்கான உத்தேசச்செலவினம் ரூ3,20,000/- ( ரூபாய். மூன்று இலட்சத்தி இருபதினாயிரம் மட்டும் ) ஆகும். எனவே, மேற்கண்ட பணிக்கும், அதற்கான உத்தேசச்செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**:-

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2904 / 2021 / இ2**

**தீர்மான எண் :** 2012
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 13 :-

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 30 சொக்கர் தெருவில் உள்ள ஆழ்துளைக்கிணற்றுக்கான மின் இணைப்பு மண் சரிவு காரணமாக மேற்கண்ட மின் இணைப்பு மூடப்பட்ட காரணத்தால், மேற்கண்ட பகுதி மக்கள் மிகுந்த அச்சத்துடன் அப்பகுதியை கடக்க வேண்டிய சூழ்நிலையில் உள்ளது. மேலும், மேற்கண்ட ஆழ்துளை கிணற்றில் பொருத்தப்பட்டிருந்த மோட்டார் மற்றும் பம்புகள் எடுக்க முடியாத சூழ்நிலையில் உள்ளது. எனவே, பொது மக்களின் நலன் கருதி மேற்கண்ட அதே இடத்தில் புதிதாக ஆழ்துளை கிணற்றுக்கு புதிதாக மோட்டார் பம்ப் மற்றும் அதற்கான கேபிள் சப்ளை செய்து பொருத்தவேண்டியுள்ளது.

மேலும், வார்டு எண். 28 பாரஸ்ட் ரோடு ராஜாக்களம் பகுதியில் உள்ள ஆழ்துளை கிணற்றுக்கான சின்டெக்ஸ் தொட்டியை இடமாற்றம் செய்ய நீண்ட காலமாக கோரிக்கை விடுத்தவண்ணம் உள்ளனர். அதன்படி, மேற்கண்ட பகுதியில் ஆய்வு செய்யப்பட்டதில் மேற்கண்ட

சின்டெக்ஸ் தொட்டி வேறு இடத்திற்கு மாற்றி அமைக்க வேண்டியுள்ளது. எனவே, அதே பகுதியில் வேறொரு இடத்தில் புதிதாக மேடை அமைத்து சின்டெக்ஸ் டேங் அமைக்கவும், மேற்கண்ட பணிகளுக்கு உத்தேசச்செலவினம் ரூ3,30,000/- ( ரூபாய். மூன்று இலட்சத்தி முப்பதினாயிரம் மட்டும் ) ஆகும். எனவே, மேற்கண்ட பணிக்கும், அதற்கான உத்தேசச்செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**:-

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2901 / 2021 / இ2**

**தீர்மான எண் :** 2013
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 14 :-

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 2, பஜார் தெரு கிருஷ்ணன் கோவில் அருகில், வார்டு எண். 4, மச்சால் தெரு மற்றும் இளங்கோ தெரு, வார்டு எண். 22, சுந்தரம் தியேட்டர் லயன் ( SIR line ) வருவாய் ஆய்வாளர் அலுவலகம் அருகில் மற்றும் வார்டு 28, பாரஸ்ட் ரோடு 2 வது தெரு ஆகிய இடங்களில் உள்ள மினி பவர் பம்ப்க்கான மோட்டார் மற்றும் அதற்கான குழாய் ( Hose ) மற்றும் கேபிள் ஆகியவை பழுதடைந்துள்ள நிலையில் உள்ளது. இதனால், மேற்கண்ட பகுதி பொது மக்கள் அன்றாட தேவைக்கு தண்ணீர் வசதி போதுமானதாக இல்லை.

எனவே. பொது மக்களின் நலன் கருதி மேற்கண்ட இடங்களில் உள்ள ஆழ்துளை கிணறுகளில் பழுதான நிலையில் உள்ள மேற்கண்ட பொருட்களை புதிதாக சப்ளை செய்து பொருத்தவேண்டியுள்ளது. அதற்கான உத்தேசச்செலவினம் ரூ3,20,000/- ( ரூபாய். மூன்று இலட்சத்தி இருபதினாயிரம் மட்டும்) ஆகும். எனவே, மேற்கண்ட பணிக்கும், அதற்கான உத்தேசச்செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**:-

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2905 / 2021 / இ2**

**தீர்மான எண் :** 2014
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 15 :-**

பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தலைமையில் 23.07.2021 ம் தேதி அன்று இந்நகர்ப்பகுதியில் குடிநீர்பணி , பாதாளச்சாக்கடைத்திட்டப்பணி, தெருவிளக்குகள் மற்றும் அடிப்படை வசதிகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. அந்தந்த வார்டு பிரதிநிதிகள் மற்றும் முக்கிய பிரநிதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க மற்றும் பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் உத்திரவிற்கிணங்க,இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1, பட்டாளம்மன் கோவில் தெருவில் புதிதாக போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைக்கவும், அதற்கான உத்தேசச்செலவினம் ரூ3,20,000/- ( ரூபாய். மூன்று இலட்சத்தி இருபதினாயிரம் மட்டும் ) ஆகும். எனவே, மேற்கண்ட பணிக்கும், அதற்கான உத்தேசச்செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**:-

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2899 / 2021 / இ2**

**தீர்மான எண் :** 2015
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 16 :-**

பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தலைமையில் 23.07.2021 ம் தேதி அன்று இந்நகர்ப்பகுதியில் குடிநீர்பணி , பாதாளச்சாக்கடைத்திட்டப்பணி, தெருவிளக்குகள் மற்றும் அடிப்படை வசதிகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. அந்தந்த வார்டு பிரதிநிதிகள் மற்றும் முக்கிய பிரநிதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க மற்றும் பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் உத்திரவிற்கிணங்க,இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 32, பங்களாமேடு அய்யப்பன் கோயில் தெருவில் புதிதாக போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைக்கவும், அதற்கான உத்தேசச்செலவினம் ரூ3,20,000/- ( ரூபாய். மூன்று இலட்சத்தி இருபதினாயிரம் மட்டும் ) ஆகும். எனவே, மேற்கண்ட பணிக்கும், அதற்கான உத்தேசச்செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு**</u>:-

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2900 / 2021 / இ2**

**தீர்மான எண் :** 2016
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 17 :-</u>

பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தலைமையில் 23.07.2021 ம் தேதி அன்று இந்நகர்ப்பகுதியில் குடிநீர்பணி , பாதாளச்சாக்கடைத்திட்டப்பணி, தெருவிளக்குகள் மற்றும் அடிப்படை வசதிகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. அந்தந்த வார்டு பிரதிநிதிகள் மற்றும் முக்கிய பிரநிதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க மற்றும் பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் உத்திரவிற்கிணங்க,இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 15, உழவர்சந்தையில் புதிதாக போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைக்கவும், அதற்கான உத்தேசச்செலவினம் ரூ3,20,000/- ( ரூபாய். மூன்று இலட்சத்தி இருபதினாயிரம் மட்டும் ) ஆகும். எனவே, மேற்கண்ட பணிக்கும், அதற்கான உத்தேசச்செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு**</u>:-

அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) மேற்கண்ட தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2902 / 2021 / இ2**

**தீர்மான எண் :** 2017
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 18 :-</u>

பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தலைமையில் 23.07.2021 ம் தேதி அன்று இந்நகர்ப்பகுதியில் குடிநீர்பணி , பாதாளச்சாக்கடைத்திட்டப்பணி, தெருவிளக்குகள் மற்றும் அடிப்படை வசதிகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. அந்தந்த வார்டு பிரதிநிதிகள்

மற்றும் முக்கிய பிரநிதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க மற்றும் பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் உத்திரவிற்கிணங்க,இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 14, கம்போஸ்ட் ஓடைத்தெருவில் புதிதாக போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைக்கவும், அதற்கான உத்தேசச்செலவினம் ரூ3,20,000/- ( ரூபாய். மூன்று இலட்சத்தி இருபதினாயிரம் மட்டும் ) ஆகும். எனவே, மேற்கண்ட பணிக்கும், அதற்கான உத்தேசச்செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>:-

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2903 / 2021 / இ2**

**தீர்மான எண் :** 2018
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 19 :-</u>

தேனி- அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான T.S.No. 5814 பிளாக் எண். 10ல் பங்களாமேடு கழிவு நீர் உந்து நிலையத்தில் உயர் மின் அழுத்த எண். 85 ஐ ஆய்வுசெய்து 2021-2022 ம் ஆண்டு உயர் மின் அழுத்த இணைப்பை புதுப்பித்தல் செய்ய வரிசை எண். 1 முதல் 17 வரை உள்ள பழுது பணிகள் சரிசெய்து விண்ணப்பிக்குமாறு, தேனி, தமிழ்நாடு மின்பகீர்மானக்கழகத்தின் மூலம் கடித வரைவு வரப்பெற்றுள்ளது. ( பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது )

அதன்படி, மேற்கண்ட மின் இணைப்புகளில் உள்ள பழுதுகளை சரிசெய்து ஒவ்வொரு ஆண்டும் மின் வாரிய ஆய்வாளரிடம் புதுப்பித்தல் சான்று பெறவேண்டியுள்ளது. எனவே, மேற்கண்ட 17 மின் அழுத்த இணைப்பு எண்.85 ல் உள்ள (வ.எண். 1 முதல் 17 வரையுள்ள) பழுது பணிகள் பார்த்திடவும், அதற்கான உத்தேசச்செலவினம் ரூ1.05,000/- ( ரூபாய். ஒரு இலட்சத்தி ஐந்தாயிரம் மட்டும் ) ஆகும். எனவே, மேற்கண்ட பணிக்கும், அதற்கான உத்தேசச்செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>:-

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2679 / 2021 / இ2**

**தீர்மான எண் :** 2019
**தீர்மானம்** **:** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 20 :-**

தேனி- அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான கோவில்பட்டி பஞ்சாயத்து ஆண்டிபட்டி தாலுகாவில் வைகை அணையின் புதிய குடிநீர் திட்டத்தில் உள்ள உந்து நிலையம் ( Raw Water Pumping Station ) மற்றும் குருவி அம்மாள்புரம் ( Water Treatment Plant ) ஆகிய இடங்களில் உள்ள உயர் மின் அழுத்த இணைப்பை புதுப்பித்தல் செய்ய உதவி ஆய்வாளர் அவர்களின் கடிதம் எண். 7018/E1/ DGL/AEI/R30/2021/. ல் உள்ள வரிசை எண். 1 முதல் 20 வரை மற்றும் கடித எண்.5045/E1// DGL/AEI/R30/2021/. Date.05.08.2021 ல் உள்ள வரிசை எண். 1 முதல் 15 வரை உள்ள பழுது பணிகள் சரிசெய்து விண்ணப்பிக்குமாறு, தேனி, தமிழ்நாடு மின்பகீர்மானக்கழகத்தின் மூலம் கடித வரைவு வரப்பெற்றுள்ளது. ( பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது )

அதன்படி, மேற்கண்ட மின் இணைப்புகளில் உள்ள பழுதுகளை சரிசெய்து ஒவ்வொரு ஆண்டும் மின் வாரிய ஆய்வாளரிடம் புதுப்பித்தல் சான்று பெறவேண்டியுள்ளது. எனவே, மின் அழுத்த இணைப்பு எண்.90 மற்றும் 91ல் உள்ள 35 மின் மாற்றிகளில் உள்ள பழுது பணிகள் பார்த்திடவும், அதற்கான உத்தேசச்செலவினம் ரூ3,00,000/- ( ரூபாய். மூன்று இலட்சம் மட்டும் ) ஆகும். எனவே, மேற்கண்ட பணிக்கும், அதற்கான உத்தேசச்செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>:-

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2678 / 2021 / இ2**

**தீர்மான எண் :** 2020
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர் ( மற்றும் )
ஆணையாளர்
தேனி - அல்லிநகரம் நகராட்சி